உ

வேலுமயிலுந்துணை.

திருப்பூர் ஸ்ரீமான்

நாராயணசாமி [illegible]வர்களால்

இயற்றிய

புதிய மதுர சத்தம்

குமரகுரு பக்திரச கீர்த்தனங்கள்.

தாலூகா போர்டு மெம்பரும் [illegible]பாளையம் சேர்மனுமாகிய

ஸ்ரீமான் N. C. லட்சுமண செட்டியாரவர்கள்

விருப்பத்[illegible]ல்

ஸ்ரீ கிருஷ்ண பிரிண்டிங் ஒர்க்ஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Registered.

1923.

ரிஜிஸ்தர் செய்தது.

விலை அணா 3

உ

செப்பைத் துணை

திருப்பூர்

ஸ்ரீமான் நாராயணசாமி அவர்களால்

இயற்றிய

புதிய மதுர சந்தம்

குமரகுரு பக்திரஸ கீர்த்தனங்கள்.

தாலூகா போர்டு மெம்பரும் நடுப்பாளையம் சேர்மனுமாகிய

ஸ்ரீமான் N. C. லட்சுமண செட்டியார் அவர்கள்

விருப்பத்தின்பேரில்

ஸ்ரீ கிருஷ்ண பிரிண்டிங் ஒர்க்ஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Registered.

1923.

ரிஜிஸ்தர் செய்தது.

விலை அணா 3.

வேலுமயிலுந் துணை.

குமரகுரு மதுர சந்தம்

ஸ்ரீமான் P. C. R. நாராயணசாமி அவர்கள்

கோயமுத்தூர் ஜில்லா,

திருப்பூர்.

வேலுமயிலுந்துணை.

திருப்பூர்.

மதுர சந்தம்

நாராயணசாமி அவர்கள்

இயற்றிய புதிய

குமரகுரு பக்திரஸ கீர்த்தனங்கள்.

கெஜமுகன் ஸ்துதி.

நிரையிசை வெண்பா.

சிந்தையிரு சிருவனிடம் சிறந்தநற் செந்தமிழால்
சந்ததமும் குமரகீதம் செப்புதற்கு—விந்தையுடன்
சந்திசுக சந்தமொடு கவிபுகல வந்துதவும்
தந்திமுகத் துணைமிகுந் தான்

சரஸ்வதிஸ்துதி.

அமுதமுதேகோ என்ற மெட்டு

இராகம்—இந்துஸ்தான்பியாக்—தாளம்—ஆதி.

பல்லவி

வாக்கருள்வாய் வீணை வாணிக்கல்யாணி (வா)

அநுபல்லவி

வாணிக்கல்யாணி வளர்தமிழ்ராணி (வா)

சரணங்கள்

புலவர்க் குபகாரி
புகழுஞ் சிங்காரி
பலகவி பாடுதற்கு
பக்கம் வந்தாதரி (வா)

ஆவலாய் இருந்து
நாவிலே சிறந்து
நாளும் மதுரகவி
ஓதும் அறுகிருந்து (வா)

திசைமுகன் பாரி
இசைபதம் கூறி
தித்திக்கும் நாராயண
சாமிஅகமே கோறி (வா)

சரிசரி சாமுத்ரி காலக்ஷணம் என்ற மெட்டு

இராகம்—தேசிகம்—தாளம்—ஆதி

பல்லவி

வாணியே நல்வாக்கே அருள் பேணியே—வீணை (வாணி)

அநுபல்லவி

வளர் மேவியதமிழ் காரணி
புலவோர் புகழ் சுக பூரணி (வாணி)

சரணங்கள்

புதுமையாகக் கவிகள் பலதும்
ஓதநாவில் அமருமே
புவியிலுள்ளோர் பெருமைசெப்பக்
கவிகளுரைக்கக் காருமே
மதுரவாக்குமே—என்
மனதுள்ளாக்குமே—தினம்
விதமாகிய பதமே வர
நிதமே உனதருளே புரி (வாணி)

(சரணத்தொடர்)

கம்பனும் உன்னை நம்பியேதான்
உரைத்த கவிகள் கோடியே
அம்புவிட்டில்தமிழ் வல்லோ
ரெல்லோரும் உம்மைநாடியே
தினம் கொண்டாடியே—கவி
வாணர் கூடியே—மிகு
களிப்பாய்க்கவி தொடுப்பார்புவி
லுரைப்பார் பலர்படிப்பார்—வீணை (வாணி)

(சரணத்தொடர்)

நாராயணசாமி நாவில்
ஆவலாய் இருந்துமே
மாறாத சந்தமொடு
செந்தமிழ் சிறந்துமே

உரைக்க உள்ளமே—உட்
கார்ந்துவிள்ளுமே—இந்த
உலகோர் மகிழ் கவிவாணனாய்
என்னையாக்கவே வாக்குமேதா (வாணி)

மதுரை மீனாக்ஷி அம்மன் ஸ்துதி

மாதுபாகமானவா என்ற மெட்டு

இராகம்—நோட்—தாளம்—ஏகம்

கண்ணிகள்

செல்வியே சிங்காரியே சேரும்கெம்பீரியே
சொல்லுப காரியே சொக்கேசர்பாரியே
மாமது—ர்புரி—மேவிய—மாக்ஷிமை மீனாக்ஷியே
மாரிடா—தேதுதி—யேசெய்து—கோறினேன் கடாட்சியே

நேமமிகும் நாராயண
சாமிதுதி கவிஉரைத்தேன்
தேன்மதுர வாக்கிலிரு
தேவிபல பாவிரித்தேன்

பூவிலுள்—ளோர்பணி—பூரணி—காரணி—புண்யமாமணி(செல்)

ஷஷ்டி ஸ்துதி

செந்தாளம்பூ என்ற மெட்டு,

இராகம்—பியாக்—தாளம்—ஆதி

அம்பாகண்பார் சத்தி கௌரி
என்பால் அருளை அன்பாய்த்தா (அம)

அநுபல்லவி

அன்னையே தயாபரியே
என்னைக்கார் ஈஸ்வரியே
ஏழைக்குன்னருள் இவ்வேளைக்கித்தந்தென்னை
ஆளத்தகையா உன் அடிமை அறியும் (அம்)

கருணை கௌரி நாயகியே
சரணமென் சகாயகியே
சேதியே செல்வியே ஓதினேன் நானு
மனுதியு மாகினேன் ஆட்கொள்ளும்தாயே (அம்)

சந்ததம் இப்புவியிலே
சொந்தமா யென்னுவிலே
சொல்லும் நாராயணசாமி சங்கீதம்
எல்லாரும் கொண்டாடும் வல்லமைதேவியே (அம்)

பார்ஸி நோட்

கந்தாகுக கார்த்தி கேயனே
கண்பாரும்தூயனே (கந்)

தந்திமுகத்தம்பி வேலனே
வந்தாளும்பாலனே [தந்]

மைந்தர் மக்கள்மனைவி மாயமே
மண்மீதபாயமே (மை)

பொய்முழுதும் காமக்காயமே
செய்வாய் சகாயமே (பொ)

சர்ஜனர் கொள்சாமிசண்முகனே
சரணம் ஆறுமுகனே (சர்)

சஞ்சலத்தால் அஞ்சுகின்றேனே
தஞ்சமாய் நின்றேனே (சஞ்)

உன்னைவிட யாரில்லை கதியே
என்னை ஆள் அருநியே (உன்)

நாராயணசாமி சொல் விதியே
நன்றாகச் சம்மதியே (நா)

மேரேதார்தேஜிகர்கி என்ற மெட்டு.

இராகம்—சிந்துபைரவி—தாளம்—ஆதி

பல்லவி

கோலாகலத் துய்யா வேலாயுதக்கையா (கோ)

அநுபல்லவி

வேலாயுதக்கையா வேண்டினேனய்யா [கோ]

சரணங்கள்

குலக்குரு விளக்கே
குணமதைத் துலக்கே
வளரும் பழனியில் அழகும்தங்கிடும்
உலகம் புகழ்திரு உமையவள் சற்குரு (கோ)

ஆறுமு கய்யா
ஆதரி மெய்யா
ஆனந்தம்மயில் மீதேவந்திட்
வேணும்சரவண பவசண்முகனே (கோ)

கடம்பணி மார்பா
கார்க்களன் நேர்வா
கனமாய்குறமக ளிடமேஅணுகியே
மணமேபுரிந்துமே தினமாதின்றவா (கோ)

நாதனே	வேலா
நம்பினேன்	சீலா
நேமித்தேன்கவி	ஆர் நாராயண
சாமிக்கும்அருள்	தாரும்இன்புற (கோ)

தாரானபோலுதாரா என்ற மெட்டு.

இராகம்—தேசிகதோடி—தாளம்=ஆதி

பல்லவி

நாதா குகா முருகா (நா)

அநுபல்லவி

ஆதாரம் இரு பாதாரம் குரு (நா)

சரணங்கள்

வேதாகமப்	பொருளே
வேண்டினேனுன்	னருளே
வேகமதாய்	உலாவுமாமயில்
வாகனமீதி	லேரும்நற்குரு (நா)

(தொகையறு)

அமரர் முழுதும் உமதடிபணியும்
உமை குமர துரையே
சமயமிது நின்சமுகம் அணுகி
புகல என் குறையே

(பாட்டு சரணத்தொடர்)

அழகுநிலைப் பூமானே
பழனிமலைச் சீமானே
பேதைஉன்பத மேஅனுகிட
பாதையுமறி யேனுன்னடிமை (நா)

(தொகையறு)

பாரதீர சூரரை வேரறுத்த
பாலசுப்ரமண்யனே
வீர கெம்பீர வேல் நிறுத்தி
ஆள் மகுத்வ புண்யனே.

(பாட்டு சரணத்தொடர்)

பூமாது குறத்திக் கோனே
பூண்டோனுன்பதத்தை நானே
பூமியிற்பதம் ஆர் நாராயண
சாமி சந்தகம் ஓதும் கந்தவேள் (நா)

ஆண்டிப்பண்டாரம் என்ற மெட்டு

இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—ஆதி

பல்லவி

ஆனந்தக் குகனே ஆதி
அரன்பெற்ற மகனே பழனி (ஆ)

சரணங்கள்

ஆடும்மயில்வாகனனே
கூடும்வள்ளி நாயகனே
நாடும்பக்தர் ஞானகனே
நாடினேன் திருமோகனனே (ஆ)

பாலாபிஷேக மூர்த்தி
பார்த்தே பணியநேர்த்தி
கோலாகலத்தின் கீர்த்தி
கோவிலிலே முழங்கும் பூர்த்தி (ஆ)

தந்திமுகச் சோதரனே
கந்த உபகாரகனே
சந்தகம்பெம்பீரகனே
சண்முக சிங்காரகனே (ஆ)

சீரான உன் பதவி
சீக்கிரந்தா எனக்குதவி
நாராயணசாமிகவி
நாடிப்பாடு மிந்தப்புவி (ஆ)

அம்பிகா உன்மகன் குகன் என்ற மெட்டு.

இராகம்—தேசிகதோடி—தாளம்—ஆதி

பல்லவி

நம்பினேன் உன்பதம் நாதா
எம்பிரான் உன் அருள் தாதா [நம்]

சரணங்கள்

தும்பிக்கையனுடன் பிறந்தான்
தம்பி ஆறுமுகன் சிறந்தான்
கும்பிட்டோரரு கிருந்தான்
குணத்தை—க்ஷணத்தில்—விதிக்கும்—வேலவனே (நம்)

வஞ்சிவள்ளி நாயகனே
கெஞ்சினேன் சகாயகனே
தஞ்சமானேன் தேசிகனே
திடத்தைக்—கொடுத்து—நலத்தைப்—படுத்துவாய். (நம்)

தேனும்தினைமாப் புசித்து
தென்பழனிநகர் வசித்து
தேவனேதினம் ரக்ஷித்து
தேடும்குக—பாலன்கவி—பாடும்படி—நாடும்படியே. [நம்]

பாராயோபாச பந்தம்
மாராதஜென்ம தொந்தம்
நாராயணசாமி சந்தம்
நிதமும்கவி—வளரும்படி—உதவும்படி—அருளுந்தருவாய் [நம்]

ஆனந்த மானந்த மானந்தமே பர என்ற மெட்டு.

இராகம்—இந்துஸ்தான்தோடி—தாளம்—ஆதி.

பல்லவி

வேலவன் வேலவன் வேலவனே யார்க்கும்
மேலவன் மேலவன் மேலவனே

அநுபல்லவி

வேண்டுவோர்க்குன் பதமே
பூண்டு பூரிப்பார் சதமே (வே)

சரணங்கள்

நாலாவிதத்திலும் நானேதுதித் தாட
கோலாகலக்கவி கொண்டாடிப் பாட
பாலாபிஷேகனின் பாதமே நாட
கினையகலத்—துணைபுரியும்—கணபதியின்—இளையவனே (வே)

தேவிஉமை பெற்ற தோகைமயில் வீர
சேவித்தோர்க்குச் க்ஷேமம் தருமுப கார
பூவிவரயாரை ஆளும் அதி கார
பவத்தை அளி—சுகத்தை இடு—ஜெகத்தினிலோர்—மருத்துவனே
(வ)

ஓராறுமுகனே ஈராறுகையனே
காராயனுதினம் கண்பாரும்மெய்யனே
நாராயணசாமி நற்கவிதுய்யனே
நேர்திருப்பூர்—மாமதுரப்—பாவிசைக்கு—நாளிருக்கும் (வே)

வேலனே இந்த வீணனையேன் என்ற மெட்டு.

இராகம்—தேசிகதோடி—தாளம்—ரூபகம்

பல்லவி

கார்த்திகா என்னை கார்த் தருள் பால்கொடுத்தே—திரு
குறமாதுட னுரவாடிய குமரா புகழ்குருவே துணை
கார்த்தருள் பால்கொடுத்தே [கார்த்தி]

அநுபல்லவி

வண்ணமயில்பால சுப்பிரமண்யதீர
வருவாய்புனதொருவாய் மொழிதருவாய் திருமால்மருகா
சார்த்தருள் பால்கொடுத்தே (கார்த்தி)

சரணங்கள்

காசாசை மேலிட்ட கசடர்களிருந்து
காணுதிருப்பார்நின் திருவடிமறந்து
தோணும்பூமி பாரம் துஷ்டர்கள்பிறந்து
தெரிவாய் இதை அரிவாய்சுக அரனார்தவ ஆறுமுகனே
கார்த்தருள் பால்கொடுத்தே (கார்த்தி)

திருப்பூர்நகர்வாழும் நாராயணசாமி
விருப்பமாய்ச்செந்தமிழ் விரித்தேனெந்தன்சாமி
சிறப்பாய் வரமொன்று சிறியேனுக்குநேமி
சுகமேவியகுகனே இனி மாவேனுனை திருமுருகா
கார்த்தருள் பால்கொடுத்தே [கார்த்தி]

ஆண்டவா ஆநேந்தில்லே தாண்டவா என்ற மெட்டு.

இராகம்—சிந்துபைரவி. தாளம்—ஏகம்.

பல்லவி

வள்ளி—மோகனு நீலமயில் வாகனு
மாதுமைபாலா உன்பால் பாஒதினே
நீமைபில் வாகனு

ஆட்கொள்ளும் உன்னிரு திரு வடி விளங்க
அணிந்தேன் அணிந்தேன் அணிந்தேன் அணிந்தேன்
அரக்கரினத்தை இறக்கவேலதை
காத்தி லெடுத்த குறத்திக் குகனே (மோ)

மால் மருகனே முருகா சிவனுர்
மகனே மகனே மகனே மகனே
முக்தி பதத்தினி லெத்தினம் பக்தியே
சுந்த அகத்துடன் நித்தம்துதித்தேன் (மோ)

நாராயணசாமி துதிசெய்யும் கந்த
நாதா நாதா நாதா நாதா
திருப்பூர் நகரோன் உரைத்த கவியே
சிறப்புடனே இச் சிரியேனைக்காரும் (மோ)

சமக்கத்தக்கன என்ற மெட்டு

இராகம்—தேசிக சுருட்டி—தாளம்—ஆதி

பல்லவி

புவிக்கித் தாய்தந்தை ஆகும் ஆறுமுகன்
பூலோகத்திலெங்கும் வாசன் வடி
வேலாயுதக்கரத் திசன் (புவிக்)

அநுபல்லவி

துதித்து துதித்து பெருத்த பதத்தை
தேடிவரவழி காட்டுமவ் விதத்தை
தாயமிருங்குரு சொல்லுமுன் கருத்தை
மாயமானது பொய்க் காயம் இந்த
சேயனை ஆளும் சகாயம் (புவிக்)

சரணங்கள்

இன்னும் ஏழைமீதில்வர்மம் இருக்கலாமோ வேலவனே
பன்னும் பாகிசைக்திருப்பாய் பன்னிருகை காவலனே
கன்னிகுற வள்ளிதனை கலந்திருக்கும் சேவலனே
எண்ணிஇரு உன்னடிமை என்று காரும் பாவலனே
இப்புவி விளங்கும் நாராயணசாமி
செப்புங்கவிக் குபகாரன்—புகழ்
செந்தமிழுக் கதிகாரன் (புவிக்)

கவுனமிஸியார என்ற மெட்டு.

இராகம்—தேசிக பியாக்—தாளம்—ஆதி.

செந்தில் நகர் செல்வக்கந்தன் சுந்திர வள்ளி துரையே—தினம்
அந்திபகலடி துதித்தால் அகலுமேவினைக்குரையே

ஆண்டிவேடனும் அறியே—பதம்
வேண்டுவார்கள் கரையே—இங்கு

வளர் திருப்பூர் கவிமதுரன்
வாக்கிலுரைத்த துரையே (செந்)

நாராயணசாமிக்கவி நாதனேவடிவேலன்—தினம்
மாராத மதுர வாக்கு மனதுக்குத்தரும் சீலன்
வள்ளி தெய்வானை லோலன்—தினம்
வணங்கு வோர்க் கனுகூலன்— புகழ்
வேதமறை மீதமர்ந்த
பாத லக்ஷ்மியை பாலன் (செந்)

கார்த்திகா நித்திய கல்யாண என்ற மெட்டு.

இராகம்—தேசிகப்பிரியா—தாளம்—சாப்பு

கண்ணிகள்

அம்பிகை மகன் குகன் நாதன்
நம்பினோர்க்கியும் மலர்ப் பாதன்
அம்புவி முழுதாண்டவனே
ஆதரி அருள் பூண்டவனே

தையலாள் சுகலா வண்யனே
அய்யனும் அருள் சௌண்யனே
துய்யனும் ஞான புண்யனே
துதித்தேனே சுப்பிரமண்யனே [அம்பி]

தொகையறா

சேவற்கொடியோனே செல்வச் சிமானே
செந்தில் நகர் கோனே
பூவில் பக்தரைத்தானே பாதுகார்க்கும் பூமானே
பணிந்தேனிங்கு நானே

முடுகு சந்தம்

அழகிடும் மயிலேறி நடமிடும் வாசன்
அறுதின மடியவரி ருதய நேசன்
தமிழ் மிகு புலவர்க்குத் தருமுபகாரன்
தாணியில் துலங்கிடும் அலங்கிர்ததீரன்

பல்லவியெடுப்பு

நாராயணசாமி மாசந்தம் பாடி
நோாகப்பதிப்பேனே நெஞ்சில்மூன்னடி [அம்பி]

குயிலே யென்றன் மீதி என்ற மெட்டு.

இராகம்—மால்கோக்ஷ—தாளம்—சாப்பு

பல்லவி

குகனே சுக சாமி சிங்காரனே வாவா

அநுபல்லவி

ஜெகமதில்மேலே ஜெயம் பெறும் வேலே
ஜென்மத்தைக் கார்க்கும் சர்ஜ்ஜனர்கள் பாலே [குக]

விண்ணவர் ஈசா விளங்கும் பிரகாச
எண்ணம் ஏழை இடம் வைத்திடும் நேசா (குக)
ஞானில மன்னு ஞானப்பிரசன்னு
ஏனினிக்கார்க்க வராதது மென்ன [குக]

திருப்பூரின் வாசன் திருக்தாயின் நேசன்
சிறுவன் நாராயணசாமிக் கவிதாசன் [குக]

சோமசேகரனருளும் என்ற மெட்டு.

இராகம்---இந்துஸ்தான் கவாய்---தாளம்---ஆதி

பல்லவி

சரஸ்வதி அருள் கம்பன்	அல்ல	அல்ல	நான்
வரிசை வாக்குறுதி ஔவை	அல்ல	அல்ல	[சர]

அநுபல்லவி

கவிமாரி பொழியும் காளி	அல்ல	அல்ல	நான்
களம் சிறந்த புகழேந்தி	அல்ல	அல்ல	முன்
ஒட்டக்கூத்தர் புலவர் போல	அல்ல	அல்ல	நான்
ஓதும்குரு உபதேச சிஷன்	அல்ல	அல்ல	திருக்
குமரனருளா லுரைத்தேன்	நானே	நானே	சிறு
கவிஉரைத்தேன் பிழைபொருப்பீர்	தானே	தானே	தமிழ்
கரைகண்டதோர் கவிவாணர்	தானே	தானே	இதில்
குறை இருந்தால் குணந்தருவீர்	தானே	தானே	
நாராயணசாமி சொன்ன	சந்தம்	சந்தம்	கவி
நாவிலே யுரைத்த பதம்	சொந்தம்	சொந்தம்	[சர]

இப்புத்தகத்தை சரிவரப் பார்த்தும் பாராது கவிச்செருக்கை வைத்துக் குறைகூறும் கவிவாண சிலர்கள் கீழ்கண்ட ஔவையார் செப்பிய வெண்பாவால் உறுதி உணர்க.

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை ஓதுகிறாள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்

நிரைந்தது நிலைக்கும்
குரைந்தது குலைக்கும்
இஃதும் உணர்க.

முதல் பாகம் முற்றிற்று.

முக்கிய கவனிப்பு.

இதனல் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:—

திருப்பூர் ஸ்ரீமான் மஹாசந்தம் P. C. R. நாராயணசாமி அவர்களால் இயற்றிய குமரகுரு பக்திரஸ கீர்த்தனங்கள் என்று பெயரிட்ட இப்புத்தகத்தையாவது இதிலுள்ள பாடல்களையாவது கீழ்கண்ட விலாசதாரரின் உத்திரவன்றி அச்சிடுவாரேயாகில் கீழ்கண்ட விலாசதாரர் கோரும் நஷ்டத்திற்கு உடன்படுவீர்களென்று உறுதியாயறியவேண்டும்.

இப்படிக்கு,

K. V. அங்கப்ப செட்டியார்,

பஞ்சுவர்த்தகம்,

திருப்பூர்.

விளம்பரம்.

அல்லி சரித்திரம், லலிதாங்கி சரித்திரம், கோவிலன் சரித்திரம் ஞானசௌந்திரி சரித்திரம், பெரிய பிரபுக்களும் நாடக நண்பர்களும் தமிழபிமானிகளும் விரும்பித் தூண்டியதால் மேல்கண்ட சரித்திரங்கள் கூடிய சிக்கிரம் வெளிவருமென்று எமது பிரியமுள்ள நண்பர்களனைவரும் எதிர்பாருங்கள்

குமரகுரு பக்திரஸக் கீர்த்தனங்கள் 2, 3-ம் பாகங்கள் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

K. P. WORKS.
TIRUPUR.